2011 பிப்ரவரி 9]
33—

பணிமனை

***121214—டாக்டர் க. நெடுஞ்செழியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், பரமத்தி பேரூராட்சியில் சுப்பிரமணியசாமி கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் பணிமனை துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.என் நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் வட்டம், பரமத்தி சுப்பிரமணியசாமி கோயிலுக்குச் சொந்தமான இடத்தை ஆய்வு செய்ததில் மேற்படி நிலத்தின் பெரும்பகுதி பாறைகளாகவும், பாறைகள் இல்லாத பகுதி குண்டுங்குழியுமாகவும் இருக்கிற காரணத்தால், சமமான பகுதி குறைவாகவும் உள்ளது. இந்த நிலம் பணிமனை அமைக்க உகந்ததாக இல்லை. எனவே, மேற்படி நிலத்தில் இப்போதைக்கு பணிமனை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.*

டாக்டர் க. நெடுஞ்செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, அந்த சுப்பிரமணியசாமி கோயிலினுடைய நிலத்தில் பாறை இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்கிறேன். நான் நேற்றைக்கு விசாரித்ததிலே பரமத்தியிலே சிதம்பர விநாயகர் கோயிலுக்கும் அழகு நாச்சியம்மன் கோயிலுக்கும், சந்தை மாரியம்மன் கோயிலுக்கும் தனித்தனியாக ஏறத்தாழ 9 ஏக்கர், 6 ஏக்கர், 3 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த நிலத்துக்காரர்களெல்லாம், தங்களுடைய நிலங்களை, போக்குவரத்துக் கழகத்திற்கு கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். அதற்கு நான் ஆவன செய்வேன் என்பதைத் தெரிவதுதுக்கொண்டு, நேற்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து நிதியை ஒதுக்கீடு செய்தால் நான் அமைத்துத் தருவேன் என்று சொன்னார்கள். காலம் அருகி விட்டது. நிதி எல்லாம்*

கொடுக்கப்பட்டுவிட்டது. என்னுடைய தொகுதிக்கு, இந்தச் சட்டமன்றத்தின் ஆரம்பத்தில் 2 விரைவுப் பேருந்துகளை அளித்தீர்கள். தொடர்ந்து 9 புதிய வழித் தடங்களில், பேருந்து வசதிகளைச் செய்து கொடுத்தீர்கள். கேட்டவுடனேயே வட்டாரப் பகுதி போக்குவரத்து அலுவலகத்தை அமைத்துக் கொடுத்தீர்கள். அதேபோல, இந்தப் பணிமனையையும் நீங்கள் அமைத்துக் கொடுப்பீர்கள் என்ற நல்ல நம்பிக்கையிருக்கிறது. எதிர்வரும் காலத்திலும் கண்டிப்பாக நீங்கள் அதே இடத்தில் இருப்பீர்கள். அதை அமைத்துத் தர ஆவன செய்வீர்களா என்பதை இந்த நேரத்தில் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சுப்பிரமணியசாமி கோயிலுக்குச் சொந்தமான இடம், உகந்ததாக இல்லையென்ற காரணத்தால் மாவட்ட ஆட்சித் தலைவருக்குப் பரிந்துரைக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் தாசில்தாரிடம் இடம் இருக்கிறதா என்று பார்க்கச் சொல்லி, தாசில்தார் இடம் இல்லையென்று சொல்லிவிட்ட காரணத்தால், தற்போது அது அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போதுதான் மற்ற கோயில்களுக்குச் சொந்தமான இடம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதை அவர்கள் தருவதற்கு சம்மதித்தால், உடனடியாக நாங்கள் ஏற்கலாம். ஆனாலும், காலம் அதற்கு இடம் தருமா என்று தெரியவில்லை. ஆனால், முயற்சி எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல வட மாநிலங்களிலே, இரவு நேரத்தில் தூக்கக் கலக்கத்துடன் வாகனங்களை ஓட்டும் ஓட்டுநர்கள் இருக்கிற காரணத்தாலே பல இடங்களில் விபத்து நடக்கிறது. அதைத் தடுக்க வேண்டும். பீகார் போன்ற. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கேள்வி முழுக்க, முழுக்க சம்பந்தம் இல்லாதது. உட்காருங்கள்.

2011 பிப்ரவரி 9]

டாக்டர் க. நெடுஞ்செழியன்: இது முக்கியமான கேள்வி. வாய்ப்பு ஒரு முறைதான் கொடுக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, சொல்லுங்கள்.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: இரவு நேரங்களிலே பல மாநிலங்களிலே, இரவு 12 மணி முதல் காலை 5 மணி வரை லாரிகள் ஓட்டுவதை நிறுத்தியிருக்கிறார்கள். அதுபோன்ற மாநிலங்களில் விபத்துகள் நடப்பது குறைவாக இருக்கிறது என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. அதுமாதிரி இங்கேயும் ஆவன செய்வீர்களா என்பதை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அளவிலே எடுத்துக்கொண்டால் மகாராஷ்டிரா 1 கோடியே 30 லட்சம், அதிகமான வாகனங்களைக் கொண்டிருக்கின்ற முதல் மாநிலம். தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 1 கோடியே 15 லட்சம் வாகனங்கள் இருக்கின்றன. இந்தியாவிலேயே அதிகமான 2 சக்கர வாகனங்கள் கொண்ட மாநிலம் நம்முடைய மாநிலம்தான். எனவே, போக்குவரத்தை, இரவு 12 மணியிலிருந்து 5 மணி வரை நிறுத்துவோமானால் மறுநாள் காலை வேலைக்குச் செல்பவர்கள், மற்ற பயணிகள் நிச்சயமாகப் பாதிக்கப்படுவார்கள். அதனால்தான், இப்போது போக்குவரத்துக் கழகத்தில் எல்லாம் 3 ஷிப்ட் கொடுத்து விட்டோம். உதாரணத்திற்கு நாகர்கோவிலிலிருந்து வருவார்களேயானால் 2 டிரைவர்கள், இல்லையென்றால் 3 டிரைவர்களை மாற்றுகின்ற அளவுக்குச் செய்திருக்கின்றோம். இப்போது இருக்கிற சாலை வசதியின் காரணமாக வெகு வேகமாக ஓட்டக்கூடிய வசதி இருக்கின்ற காரணத்தால், விபத்துகள் நடைபெறுகின்றன. அவற்றைத் தடுப்பதற்காகத்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரையின்படி, விபத்துப் பகுதிகள் என்று கண்டறியப்பட்டு, அந்தப் பகுதிகளில் எல்லாம் எச்சரிக்கைக் கருவிகளைப் பொருத்தவும், அதேபோல, தேசிய நெடுஞ்சாலைகளில் இணைகிற கிராமச் சாலைகளுக்கு முன்னால் Speed Breaker போடவும், ஆங்காங்கே எச்சரிக்கைப் பலகைகளை நிறுவவும், பல்வேறு வகைகளில் விபத்துத் தடுப்பு நடவடிக்கைகளைச் செய்து கொண்டிருக்கிறோம். குறிப்பாக, திருப்பூரிலிருந்து கோயம்பேடு வருகிறபோது அதிகமான விபத்துகள் ஏற்படுகின்றன என்று

[2011 பிப்ரவரி 9

ஆய்வாளர்கள் ஆய்வு செய்கிறபோது குறிப்பிட்டிருக்கிறார்கள். காரணம் அங்கே தெரு விளக்குகள் குறைவாக இருக்கின்றன என்று சொல்லி அவற்றைப் போடுவதற்குச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, எந்தெந்தப் பகுதிகளில் விபத்துகள் நடைபெறுகின்றன என்பதைக் கண்டறிந்து, உடனடியாக அவற்றை நிவர்த்தி செய்கின்ற பணியை துறை செய்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து அதைச் செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி.

முற்பகல் 9–50

திரு. சு.ப. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேரூர் தொகுதிக்கு உட்பட்ட மதுக்கரை யூனியன், குரும்பவளையம் பள்ளியை மூடுகின்ற சூழ்நிலை இருக்கிறது. நான் பலமுறை இந்தச் சட்டமன்றத்தில் வலியுறுத்தியும்கூட, போக்குவரத்து ஆணையர் அலுவலகத்திற்குச் சென்றபோதுகூட அங்கே பஸ் விடுவதற்கு உத்தரவு போட்டுவிட்டார்கள் என்று சொன்னார்கள். ஆனால் ஏதோ ஒரு காரணத்திற்காக, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் என்கிற காரணத்தினாலே அங்கு பேருந்து விடப்படவில்லை. தொடர்ந்து 3 வருடங்களாக பல போராட்டங்கள் நடத்தியும்கூட பஸ் விடப்படவில்லை. ஒரு வாரத்திற்கு முன்பு ஆண்டு விழாவுக்குச் சென்றபோதுகூட, இந்த அரசாங்கம் பஸ் விடவில்லை, எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி வந்தால்தான் பேருந்துவிடப்படும் என்கிற சூழ்நிலை உள்ளது என்றெல்லாம் பேசிவிட்டு வந்தேன். Open–ஆகவே பேசிவிட்டு வந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சு.ப. வேலுமணி, கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு கூடாது. பஸ் விடுங்கள் என்று மாத்திரம் சொல்லுங்கள். எதிர்க்கட்சி உறுப்பினர் கேட்பதால் பஸ் விடவில்லை என்று ஏன் சொல்கிறீர்கள்?

திரு. சு.ப. வேலுமணி: இந்தக் கடைசிக் கட்டத்திலாவது இந்த அரசாங்கம் பஸ் விடுமா என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதிகளுக்குப்

2011 பிப்ரவரி 9]

பேருந்து விடக்கூடாது என்கிற எண்ணம் இந்த அரசுக்கு அறவே இல்லை. கேட்கின்ற உறுப்பினர்களுக்குத் தேவையாக இருக்குமானால், மக்களுக்காக அந்தப் பணிகளைச் செய்து கொண்டுதான் இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்த வழித்தடத்தை எழுதித் தருவார்களேயானால், நீங்கள் நினைப்பதைப் போல உடனடியாக அங்கு பேருந்து விடப்படும் என்கிற உறுதியை இங்கு தருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, இது கடைசிக் கட்டம் எல்லாம் இல்லை. மீண்டும் கலைஞர்தான் வருவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ. ராஜன்.

திரு. அ. ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்பொழுதெல்லாம் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வருகிறார்களோ, அப்பொழுதெல்லாம் தமிழகத்தில் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சிப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. என்னுடைய நாகர்கோவில் சட்டப் பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட செட்டிகுளம் பகுதியில் போக்குவரத்துப் பணிமனை வேண்டுமென்று கேட்டவுடன், நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் அதைத் தந்தார்கள், நிதி ஒதுக்கீடும் செய்தார்கள். பணிகள் முடிவடைந்து திறக்கப்பட வேண்டிய நிலையில் இருக்கிறது. இன்னும் 10 நாட்களுக்குள் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் எங்களுடைய மாவட்டத்திற்கு வந்து, அதைத் திறந்து வைக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், தனியார் பேருந்துகளே இல்லாமல், முழுவதும் அரசுப் பேருந்துகளே ஓடிக்கொண்டிருக்கின்ற மாவட்டமாகும். நம்முடைய மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் அங்கு ஓடிக்கொண்டிருக்கின்ற பேருந்துகள் எல்லாம் பழமையானவையாக இருக்கின்றன; புதிய பேருந்துகளாக மாற்றித் தர வேண்டுமென்று கேட்டார்கள். வருகின்ற 16 ஆம் தேதி அந்த மாவட்டத்திற்கென்று இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட 150 புதிய பேருந்துகளும் அங்கு இயக்கப்பட இருக்கின்றன. அப்படி

வருகின்றபோது 16 ஆம் தேதியே அந்த அலுவலகமும், பணிமனையும் திறக்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குடி தொகுதி, ஆலங்குடியில் பணிமனை திறக்க வேண்டுமென்று சொல்லி மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பல முறை ஒப்புக்கொண்டு, சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி கொடுத்தால் செய்யப்படும் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி கொடுக்கப்பட்டு, இப்போது பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. காலையில்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்களைச் சந்தித்து இதுசம்பந்தமாகக் கேட்டேன். அவரும் இந்த மாதத்திற்குள் திறந்துவிடுவோம் என்று சொன்னார். ஆகவே, வருகின்ற 28 ஆம் தேதிக்கு முன்னால் ஆலங்குடியில் பணிமனையைத் திறக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் அந்தப் பணிமனையைத் திறக்க ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

34—

தொழிற்சாலை

***25819—திரு. எம். அன்பழகன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—